18.10.2019
அசல் வழக்கு எண்:89-2008

வா.சா3. சுந்தரபாண்டி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 4,5,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு தாக்கல் செய்த ஜெயகண்ணு என் தகப்பனார். ஜெயகண்ணுக்கு ஜெயசுந்தரபாண்டி ஜெயமுத்துபாண்டி ஜெயகணேசன் மக்கள் என் தாயார் இறந்துவிட்டார். சிவனம்மாள் என்ற சகோதரி இருந்தார் தற்போது இறந்துவிட்டார். ஜெயசுந்தரபாண்டி ஜெயமுத்துபாண்டியை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்த்திருக்கிறோம். சிவனம்மாள் இறந்து 10,15வருடம் இருக்கும் சிவனம்மாளின் கணவர் வாரிசுகள் உள்ளனர். சிவனம்மாளின் கணவர் சந்திரன். சுந்தர், பால்பாண்டி .கவிசுந்தரி ஆகியோர் சிவனம்மாளின் மக்கள். என் தகப்பனார் இறந்து போன போது எனது சகோதரியின் வாரிசுகளும் என் தகப்பனாரின் வாரிசாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சிவனம்மாளின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் ச.எண்252 விஸ்தீரணம் 90X90.தாவா சொத்திற்கு என் தகப்பனார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பாாத்துள்ளேன். வருவாய் ஆவணங்களில் தாவா சொத்தை பொறுத்து சின்னனதேவர் என்பவர் பெயரில் பதிவேடுகள் இருந்தது. சின்னனதேவர் எனது தாத்தா. சின்னனதேவர் பெயரிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பட்டா சிட்டா மற்றும் அடங்கல் பதிவேடுகளை பார்த்துள்ளேன் அது சின்னனதேவர் பெயரில் உள்ளதை பார்த்துள்ளேன். சின்னனதேவர் பெயரிலான பட்டா சிட்டா ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா ஏ்னறால் தாக்கல் செய்ய முடியும் நான் சொன்ன ஆவணங்களை பார்வையிட்டால் தான் சின்னனதேவருக்கு சொத்து பாத்தியப்பட்ட விபரம் தெரியும் என்றால் சரிதான். வழக்கின் பிராதை படித்துப் பார்த்துள்ளேன். தாவா சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டு என் தகப்பனாருக்கு கிடைத்ததக பிராதில் சொல்லியுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துபார்த்துள்ளேன் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து என் தகப்பனாருக்கு உயில் எழுதி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 உயில் எந்த வருடம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது

தகப்பனாருக்கு 2 இலக்கசொத்துக்கள் பொறுத்து உயில் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்தள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் தவிற வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் எனது தகப்பனாருக்கு உரிமை ஏற்படவில்லை ள்னறால் சரியல்ல. தாவா சொத்தை என் தகப்பனார் அனுபவம் செய்துவந்ததற்கான வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன் தாவா சொத்தை பொறுத்து எந்த வரி ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றும் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல

(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)